**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.161/2019**

**PW11**

| | | |
|---|---|---|
| **Name** | : | மரு. கமலக்கண்ணன் |
| **Father's Name** | : | கோவிந்தசாமி |
| **Village** | : | |
| **Taluk/District** | : | விழுப்புரம் |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 20.01.2026.

A1 present. A2,3 absent. Petition U/s. 317 Crpc filed and allowed.

**முதல் விசாரணை**

நான் தற்போது விழுப்புரம் அரசு மருத்துவமனையில் மூத்த உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.06.2017 அன்று திருவண்ணாமலை அரசு மருத்துவக்ககல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் உதவி பேராசியராக பணிபுரிந்தபோது வெறையூர் காவல் நிலைய குற்ற எண். 229/2017 தொடர்புடைய சி. ராஜம்மாள் 65 வயது பெண் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய காவல் ஆய்வாளார் அவர்களிடம் இருந்து வேண்டுகோள் கடிதம் பெறப்பட்டு முதல் நிலை காவலர் எண். 299 திரு. ஆர். முருகன் என்பவரால் அங்க அடையாளங்கள் சரிபார்க்கப்பட்டு அதே நாளில் பிற்பகல் 3.55 மணிக்கு பிரேத பரிசோதனை தொடங்கினேன். பிரேதத்தின் உடல் முழுவதும் விரைப்புதன்மை காணப்பட்டது. கீழ்க்கண்ட இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் காணப்பட்டன.

1. இடது மணிக்கட்டின் பின்பகுதியில் 1 செ.மீ அளவில் தையல் போடப்பட்ட காயம் தையலுடன் காணப்பட்டது. அதை கூராய்வு செய்ததில் காயத்தின் ஓரங்கள் ஒழுங்கற்று ஒட்டிக்கொண்டு காணப்பட்டது.

2. வலது உச்சி மற்றும் பக்கவாட்டு மண்டையில் மேல்தோளில் 8.5 செ.மீ தையல் போடப்பட்ட காயம் தையலுடன் காணப்பட்டது. அதை கூராய்வு செய்ததில் காயத்தின் ஓரங்கள் ஒழுங்கற்று ஒட்டிக்கொண்டு காணப்பட்டது.

3. மண்டை ஓட்டு மேல்தோளை உரித்ததில் கருஞ்சிவப்பு நிறத்திலான படர்ந்த கன்றிய காயம் வலது முன் மற்றும் உச்சி மண்டை பகுதியில் காணப்பட்டது. மண்டை ஓடு , மூளைச்சவ்வு, மண்டை ஓடின் அடிப்பகுதி நல்ல நிலையில் இருந்தது. மூளை சாதாரண அளவில் இருந்தது. கூராய்வு செய்ததில் நல்ல நிலையில் இருந்தது.

இருதயம் பெரிதாக காணப்பட்டது. 3.5 x2 செ.மீ அளவில் சிவந்த படலம் இடது பக்க இதயத்தின் முன் பகுதியில் காணப்பட்டது. இருதயத்தை கூராய்வு செய்ததில் அனைத்து அறைகளிலும் திரவம் மற்றும் உறைந்த ரத்தம் காணப்பட்டது. வால்வுகள் தடித்தும் சுண்ணாம்பு பூத்தும் காணப்பட்டது. இரண்டு கொரோனரி ரத்தக்குழாய்களும் சுருங்கி காணப்பட்டது. மகாத்தமனியின் மற்றும் கொரோனரி ரத்தக்குழாயின் உட்புறத்தில் பல கொழுப்பு படலங்கள் காணப்பட்டது. நுரையீரல்கள் சாதாரண அளவில் இருந்தது. கூராய்வு செய்ததில் நுரை போன்ற தண்ணீர் ரத்தம் தோய்ந்த நிலையில் இருந்து வெளியேறி காணப்பட்டது. குரல்வளை மற்றும் மூச்சுக்குழாய் காலியாக இருந்தது. நாவடி எலும்பு மற்றும் பிற குரல்வளை எலும்புகள் நல்ல நிலையில் இருந்தது. கழுத்தை சுற்றியுள்ள ரத்தக்குழாய்களில் பல கொழுப்பு படலங்கள் படிந்து இருந்தது. இரைப்பையில் 65 மி.லி பழுப்பு நிற திரவம் எந்தவித நாற்றமும் இல்லாமல் இருந்தது. இரைப்பை சவ்வு நல்ல நிலையில் இருந்தது. கல்லீரல் மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் சாதாரண அளவில் இருந்தது. கூராய்வு செய்ததில் ரத்தம் தோய்ந்து காணப்பட்டது. சிறுநீரகப்பை காலியாக இருந்தது. கற்பப்பை சாதாரண அளவில் இருந்தது. கூராய்வு செய்ததில் காலியாக இருந்தது. மார்பு கூட்டு எலும்பு, இடுப்பு எலும்பு மற்றும் முதுகுத்தண்டு வடம் நல்ல நிலையில் இருந்தது. உடல் உள்ளுறுப்புகள் சேகரிக்கப்பட்டு ரசாயன பரிசோதனைக்கான அனுப்பப்பட்டது. பரிசோதனையின் முடிவில் உடல் உள்ளுறுப்புகளில் எந்தவித விஷப்பொருட்களும் இல்லை என்று அறிக்கை வழங்கப்பட்டது. அந்த அறிக்கை **அ.த.சா.ஆ.**7. ரத்தம் தோய்ந்த துணி சேகரிக்கப்பட்டு ரத்த மாதிரிக்காக அனுப்பப்பட்டது. திசுக்கள் சேகரிக்கப்பட்டு திசு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது. பரிசோதனையின் முடிவில் மேற்படி நபர் மாரடைப்பால் இறந்திருக்கக்கூடும் என்றும், மண்டை ஓட்டு மேல்தோளில் மென் திசுக்கள் காயங்களின் தடயம் உள்ளது என்றும் கருத்து தெரிவித்து சான்று வழங்கினேன். அந்த 19.06.2017 தேதியிட்ட பிரேத பரிசோதனை சான்றிதழ் **அ.த.சா.ஆ.8.** 05.07.2017 தேதியிட்ட இறுதி அறிக்கை **அ.த.சா.ஆ.**9. குருதி வடிநீரியல் அறிக்கை **அ.த.சா.ஆ.10**. ஒரு நபரை ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்கள் தடி மற்றும் மரக்கொம்பால் தாக்கினால் மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயங்கள் ஏற்பட்டு அந்த அதிர்ச்சியால் மாரடைப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இறந்த நபருக்கு பிரேத பரிசோதனைக்கு முன்பே இருதய நோய் இருந்திருக்க வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். இருதய நோய் இருந்ததினால்தான் மேற்படி நபர் இறந்தார் என்றால் சரியல்ல. தலையில் ஏற்பட்ட காயத்தால் இருதய நோய் தீவிரமடைந்து இறந்தார் என்றால் சரிதான். மேற்படி நபருக்கு இருதய நோய் இல்லை என்றால் அவர் இறந்திருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.